**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 107/2023 |
| Deposition of Witness | : | PW– 4 |
| Name | : | ரவி |
| Father Name | : | செல்வராஜ் |
| Village | : | ஊதியூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 44 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 22.08.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஊதியூர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.02.2023 ஆம் தேதி காலையில் நிலைய அலுவலில் இருந்தபோது திருப்பூர் மாவட்டம், மருத்துவ ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் திருமதி. கனகராணி அவர்களது தலைமையிலான குழுவினர் காவல் நிலையம் வந்து SV புரத்தில் உள்ள சுகம் மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொள்ள உள்ளதாகவும், உதவிக்காக உடன் வரும்படி அழைத்தார்கள். நான் இது பற்றி உயர் அதிகாரி அவர்களிடம் உத்தரவு பெற்று இணை இயக்குநர் அவர்களது குழுவுடன் SV புரத்தில் உள்ள சுகம் மருத்துவமனைக்கு சென்றோம். அன்றைய தினம் காலை 11.00 மணியளவில் மேற்படி மருத்துவமனை திடீர் ஆய்வு மேற்கொண்டபோது ஆஜர் எதிரி பிளஸ்சி அங்கிருந்த நோயாளிகளுக்கு இரத்த அழுத்தம் பார்த்தும், ஊசி மருந்துகள் செலுத்தி கொண்டிருந்தார். ஆஜர் எதிரி இருந்த அறைக்கு பக்கத்தில் இருந்த மற்றொரு அறையில் தமிழ்செல்வன் என்ற ஒரு மருத்துவர் இருந்தார்.

அவருடைய பதிவு எண் 141529 பதிவு நாள்.06.08.2019. அவரிடம் இணை இயக்குநர் அவரது கல்வித்தகுதி சான்றிதழை கேட்டார். அதற்கு பின் அவர் தனது சான்றுகளை இணை இயக்குநரிடம் கொடுத்தார். அவர் அதனை சரிபார்த்ததில் கல்விதகுதி சான்றிதழ்கள் சரியாக இருந்தது. பின்னர் ஆஜர் எதிரி பிளஸ்சியிடம் அவருடைய கல்வித்தகுதி சான்றிதழ்களை இணை இயக்குநர் கேட்டார். ஆனால் அவர் அதற்கு சரிவர எந்த பதிலும் அளிக்கவில்லை. பின்னிட்டு மேற்படி மருத்துவமனையில் இருந்த நோயாளிகளிடம் விசாரித்தபோது மேற்படி மருத்துவமனையில் வைத்து ஆஜர் எதிரி 24 மணிநேரமும் இரத்த அழுத்தம், சர்க்கரை பரிசோதனை செய்தும், மருந்து மாத்திரைகள் விநியோகம் செய்வார் என கூறினார். மேலும், ஆய்வு செய்ததில் குளுக்கோஸ் பாட்டில்கள், மருந்துகள், மாத்திரைகள் ஆகியவைகள் அட்டை பெட்டியில் இருந்தது. மேலும், அவற்றை சரிவர பாதுகாப்பான முறையில் வைக்கப்படாமல் இருந்ததகாவும், அதன் மூலம் தொற்று பரவும் என்ற காரணத்திற்காக அவற்றை கைப்பற்றினார்கள். பின்னர், அந்த மருத்துவமனையில் சுமார் 12.00 மணியளவில் இணை இயக்குநர் அவர்களது குழுவினர்கள் மற்றும், என் முன்னிலையில் மூடி முத்திரை இட்டார். அதற்கு பின்னிட்டு 28.03.2023 ஆம் தேதி எதிரியை காவல் நிலையத்தில் ஆஜர்படுத்தி இணை இயக்குநர் புகார் கொடுத்தார். பின்னர் இது சம்பந்தமாக எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

23.02.2023 ஆம் தேதி எத்தனை மணிக்கு எங்கள் காவல் நிலையம் மருத்துவ குழுவினர் வந்தார்கள் என்றால் காலை 9.00 மணிக்கு

வந்தார்கள். அ.சா.1 முதல் 3 நபர்கள் எங்கள் காவல் நிலையத்திற்கு நேரில் வந்தார்கள். அன்றைய தினம் எந்த புகாரும் இணை இயக்குநர் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னை ஆய்வுக்கு உடன் வரச்சொல்லி எதாவது எழுத்து மூலமான அறிவிப்பு கொடுத்தார்களா என்றால் இல்லை. எங்கள் உயர் அதிகாரிகளுக்கு ஏதாவது அறிவிப்பு இணை இயக்குநர் கொடுத்தார்களா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் ஏதாவது எழுத்து மூலமான புகாரோ, அல்லது உயர் அதிகாரிகளின் உத்தரவோ இல்லாமல் நான் காவல் நிலையத்தை விட்டு வெளியே செல்லமுடியாது என்றால் சரிதான். எனக்கு மருத்துவமனைக்கு செல்ல ஏதாவது எழுத்து மூலமான உத்தரவு கொடுத்தார்களா என்றால் இல்லை. விஜயலட்சுமி ஆய்வாளர் போன் மூலம் உத்தரவு கொடுத்தார். அன்றைய தினம் மருத்துவ குழுவினர் காங்கேயம் மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் சந்தித்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. அன்றைய தினம் காங்கேயம் காவல் நிலைய ஆய்வாளர்தான் பொறுப்பு ஆய்வாளர் என்றால் சரிதான். அன்றைய தினம் 23.02.2023 அன்று காங்கேயம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர்தான் ஊதியூர் காவல் நிலையத்தின் பொறுப்பு ஆய்வாளர் ஆவார். நான் யாருடன் சென்றேன் என்றால் இணை இயக்குநர்தான் என்னை அழைத்துச்சென்றார். நான் மருத்துவ இணை இயக்குநருடன் காலை 11.00 மணிக்கு சென்றுபார்க்கும்போது இரண்டு நபர்கள் மட்டுமே இருந்தார்கள். அந்த இரண்டு நபர்கள் பெயர் மற்றும் விபரம் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். அங்கு பிளஸ்சி என்பவரும், தமிழ்செல்வன் என்ற மருத்துவரும் இருந்தார்கள். அங்கு நோயாளி ஒருவர் இருந்தார். அவரது பெயர் என்ன என்பதனை விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். அவர் ஒரு ஆண் நோயாளி

ஆவார். நான் சென்று பார்க்கும்போது தமிழ்செல்வன் என்ற மருத்துவர் பணியில் இருந்தார். அன்று சிகிச்சையில் இருந்தவரை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு எதுவும் செய்தேனா என்றால் இல்லை. அன்றைய தினம் ஆய்வாளர் சம்பவ இடம் வரவில்லை. அங்கிருந்த மருத்துவர் தமிழ்செல்வனையோ மற்ற நபர்களையோ விசாரிக்கவில்லை. புகார் இல்லாமல் குறிப்பிட்ட இடத்திற்கு விசாரணைக்கு செல்ல எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். சுகம் கிளினிக் அறை பத்துக்கு பத்து அளவு கொண்ட 100 சதுரடி கொண்ட அறை என்றால் சரிதான். 12.30 மணிக்கு மருத்துவமனை பூட்டி சீல் வைக்கப்பட்டது. மருத்துவர் தமிழ்செல்வனின் மருத்துவ பணி நேரம் காலை 09.00 மணியில் இருந்து மதியம் 2.30 என்றால் சரிதான். மாலை பணி நேரம் என்ன என்று நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் என்னை 08.04.2023 ஆம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். முதல் தகவல் அறிக்கை பதிவு சுமார் 45 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். மருத்துவமனையில் டியூட்டி மருத்துவர் இருக்கும்போது மருத்துவமனைக்கு பூட்டி சீல் வைக்கமுடியுமா என்றால் முடியாது. சுகம் மருத்துவமனையில் இருந்து எந்த சான்றுபொருளும் என் முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை. என் முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் ஊர் கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் சொல்லப் பட்டு மருத்துமவனைக்கு வரவில்லை என்றால் சரிதான். நானோ மருத்துவ அதிகாரிகளோ கிராம நிர்வாக அலுவலருக்கு எவ்வித தகவலும் கொடுக்கவில்லை. நாங்கள் சோதனை செய்த விபரங்கள் அனைத்தும் அடுத்த நாள் நாளிதழில் வந்துவிட்டது என்றால் சரிதான். புகாரானது 6 நாட்கள் காலதாமதமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான்

மருத்துவமனையையோ, மருத்துவமனையில் இருந்த நபர்களையோ, உபகரணங்களையோ புகைப்படங்கள் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவர் பிளஸ்சி என்ற லெட்டர் பேடோ, பெயர்பலகையோ எதுவும் அங்கு இல்லை என்றால் சரிதான். நாங்கள் சென்று பார்த்தபோது ஆவணங்கள் எதிலும் எதிரி கையொப்பம் செய்ததாக பார்க்கவில்லை. ஆவணங்கள் கைப்பற்றவும் இல்லை. மருந்துகள் விற்றதாகவோ, வாங்கியதாகவோ இரசீதுகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. ஆய்வுக்கு பின்னிட்டு உடன் சென்ற என்னிடம் மருத்துவ இணை இயக்குநர் எவ்வித சான்று பொருளையும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். இரத்த அழுத்தம் பார்க்கும் கருவி, ஊசிகள், டெத்தஸ்கோப் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரி எந்த தனிநபருக்கும் மருத்துவர் என்று சொல்லி மருத்துவம் எதுவும் பார்க்கவில்லை என்றும், அந்த மருத்துவமனையில் முறையான மருத்துவர்தான் வைத்தியம் பார்த்தார் என்றும் எதிரி எந்த வைத்தியமும் செய்யவில்லை என்றும் விடுதலை சிறுத்தை கட்சியினர் உண்மைக்கு புறம்பான காரணங்களை கூறி எதிரியை மிரட்டி பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கில் பலமுறை தகராறு செய்து வந்தும், மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கப்பட்ட தவறான புகாரின் பேரில் நாங்கள் விசாரணைக்கு சென்றபோது எந்த ஆவணங்களும் எந்த சான்று பொருட்களும் கைப்பற்றப்படாத நிலையில் எங்கள் முன்னிலையில் எவ்வித ஒப்புதல் வாக்கமூலமும் கொடுக்கவில்லை என்றும், மறுநாள் நாளிதழ் மற்றும் சமூக வலைதளங்களில் போலி மருத்துவர் கைது என்று பரவிய செய்தியை வைத்துக்கொண்டு 6 நாட்கள் காலதாமதாக பின் யோசனையின் பேரில் எவ்வித ஆவணங்களும் இல்லாமல் எதிரி மீது பொய் புகார்

கொடுத்துள்ளார் என்றும், அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.08.22 18:08:02 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்